00030

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

விசேட தேவைகள்சார் கல்வியில் சிறப்புக் கல்விமாணி நிகழ்ச்சித்திட்டம் - 2020/2021

SNU6225/ESU4125 – புனர்நிர்மானம் மற்றும் சமுதாய அடிப்படையிலான புனர்நிர்மானம்

இறுதிப் பரீட்சை - 2021

பகுதி - I இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி - II இன் ஏதாவது மூன்று (03) வினாக்களுக்கும் விடையளிக்குக.

காலம் : மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி : 25.07.2021 நேரம் : மு.ப 09.30 – ந.ப 12.30

## பகுதி I

1. உங்களுடைய சொந்த மொழிநடையில் புனர்நிர்மாணம் எனும் பதத்தினை வரையறை செய்க.

2. இயலாமை கொண்ட பிள்ளைகள் எவ்வாறு மருத்துவ மாதிரி மற்றும் சமூக மாதிரிகளுக்கு அமைவாக வேறுபட்ட வகையில் உணரப்படுகின்றனர் என சுருக்கமாக விளக்குக.

3. உலக சுகாதார தாபனத்திற்கு (1980) அமைவாக குறைபாடு எனும் பதத்தினை வரையறுக்குக.

4. சமுதாய அடிப்படையிலான புனர்நிர்மாண நிகழ்ச்சித் திட்டத்தின் ஐந்து (05) தொகுதிகளை பெயரிடுக.

5. ஐக்கிய நாடுகள் தாபனம் வரையறை செய்துள்ளமைக்கு அமைவாக சமுதாயத்தை அடிப்படையாகக் கொண்ட புனர்நிர்மாணம் என்பதற்கான வரைவிலக்கணத்தை எழுதுக.

6. சமுதாயத்தை அடிப்படையாகக் கொண்ட புனர்நிர்மாணத்தின் அடிப்படை நோக்கங்கள் எவை?

7. இயலாமைகளைக் கொண்ட பிள்ளைகளின் விருத்தியில் அனுதாபத்தினை காட்டுவதன் விளைவுகளை விளக்குக.

8. இயலாமையை கொண்ட மக்கள் தொடர்பில் சமுதாய புனர்நிர்மாணத்தின் வகிபாகங்கள் ஐந்தினை (05) குறிப்பிடுக.

(08 x 5 = 40 புள்ளிகள்)

## பகுதி II

9. i. இயலாமை கொண்ட மக்களின் தாபனம் (DPOs) என்றால் என்ன?

(08 புள்ளிகள்)

ii. இயலாமைகளுக்கான புனர்நிர்மாண செயன்முறையில் குடும்பம் மற்றும் சமுதாயம் ஆகியவற்றின் வகிபாகங்களை தனித்தனியாக வேறுபடுத்தி விளக்குக.

(12 புள்ளிகள்)

10. i. தொழிற்பாடுகள், இயலாமை மற்றும் சுகாதாரம் பற்றிய சர்வதேச வகைப்படுத்தல் (ICFDH) என்பதற்கு அமைவாக இயலாமை பற்றிய எண்ணக்கருவின் வகைப்பாடுகளைக் குறிப்பிடுக.

(08 புள்ளிகள்)

ii. மேலே குறிப்பிட்ட வகைப்படுத்தலின் ஒரு வகுப்பினை (வகை) சுகாதார நிபந்தைகள் பற்றிய சூழமைவைக் கருத்திற் கொண்டு ஒரு தனியாளின் இயலுமையை உதாரணங்களின் துணையுடன் விளக்குக.

(12 புள்ளிகள்)

11. i. புனர்நிர்மாணம் மற்றும் புனர்நிர்மாணத்தினுள் என்பவற்றுக்கிடையிலான வேறுபாடுகளை மூன்று உதாரணங்களை குறிப்பிட்டு விளக்கு.

(08 புள்ளிகள்)

ii. ஒரு கிராமத்தை அடிப்படையாகக் கொண்டு இயலாமையைக் கொண்ட மக்களுக்கான புனர்நிர்மாண நிகழ்ச்சித்திட்டத்தினை ஆரம்பிப்பதற்காக அத்தியவசியமான படிமுறைகளை விபரிக்குக.

(12 புள்ளிகள்)

12. i. ஐக்கிய நாடுகள் சபையின் இயலாமை கொண்டவர்களுக்கான உரிமைகள் பற்றிய சமவாயத்தின் (UNCRPD, 2007) நோக்கத்தினை குறிப்பிடுக.

(08 புள்ளிகள்)

ii. a) மேற்படி சமவாயத்தின் 24 ஆவது உறுப்புரைக்கு அமைவாக இயலராமை கொண்டவர்களுக்கான "கல்வியை" அரச தரப்பு எவ்வாறு உறுதிப்படுத்த வேண்டும் என விளக்குக.

(06 புள்ளிகள்)

b) இச்சமவாயத்தின் உறுப்புரை 26 இற்கு அமைவாக இயலாமை கொண்டவர்களது 'வாழ்வளித்தல் மற்றும் புனர்வாழ்வளித்தல்' பற்றி அரச தரப்பினர் உறுதிப்படுத்துதல் தொடர்பான விடயங்களை விளக்குகின்றது.
மேற்படி உறுப்புரை 26 இற்கு அமைவாக இலங்கையுடன் தொடர்புப்பட்ட எழுவினாக்களை விளக்குக.

(06 புள்ளிகள்)

13. i. இயலாமையுடைய பிள்ளைகளின் புனர்வாழ்வளித்தல் செயன்முறையுடன் தொடர்புபட்டதாக பாடசாலையொன்றின் வகிபாகம் பற்றி கலந்துரையாடுக.

(08 புள்ளிகள்)

ii. உள்ளடங்கல் வகுப்பறையொன்றின் ஆசிரியர் என்ற வகையில் இயலாமையுடைய பிள்ளைகளுக்கு புனர்வாழ்வளித்தல் செயன்முறையில் சகபாடிகள் உதவி செய்வதற்கு அவர்களை எவ்வாறு ஊக்குவிப்பீர் என விபரிக்குக.

(12 புள்ளிகள்)

14. i. அரசாங்க பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்படும் இயலாமையுடைய பிள்ளைகளுக்கான புனர்வாழ்வளித்தல் செயன்முறையின் பலம் மற்றும் பலவீனங்களை விளக்குக.

(08 புள்ளிகள்)

ii. இயலாமையுடைய மக்களுக்கான புனர்வாழ்வளித்தலில் அரசியல் பங்குபற்றல் எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகின்றது என விளக்குக.

(12 புள்ளிகள்)

பதிப்புரிமை பெற்றது